கூடுதல் தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மதுரை.
**முன்னிலை :** திரு. எஸ். அசன் முகம்மது, பி.ஏ.,பி.எல்.,
கூடுதல் தலைமை நீதித்துறை நடுவர், மதுரை.
2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் தேதி வியாழக் கிழமை

**Cr.M.P.No.4813/2026**
**CNR NO. : TNMD070133582026**
**in**
**F.No.DRI/CZU/TTN/VIII/48/02/INT-01/2026**

M.குபேந்திரன்
த/பெ.Muthusamy Kandiyar .. மனுதாரர் /எதிரி

**// எதிர் //**

The Senior Intelligence Officer,
Directorate of Revenue Intelligence,
Tuticorin Regional Unit,
South Beach Road, Tuticorin – 628001. .. எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இந்த மனுவானது என் முன்பு 05.08.2026 ஆம் தேதியன்று வந்த போது எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகி வாதிட்டும், அரசு தரப்பில் திரு.G.சாந்தநாதன் சிறப்பு அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த பின்னரும், ஆவணங்களை ஆய்ந்தறிந்த பின்னரும் இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்.....

**உத்தரவு**

பிணையில் விடக்கோரி பிரிவு 480 of BNSS ன் படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2] எதிரிமீது சட்டப்பிரிவு 135 Customs Act ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

3] கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது Commiiphora Wightii (Guggul Resin) பிசினானது இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து மரத்திலிருந்து கிடைக்கப் பெறும் பிசினிலிருந்து தயாரிக்கப்பட்டது என்றும், அந்த பிசினானது இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தால் பாகிஸ்தானில் இருந்து எந்த பொருளும் இந்தியாவிற்கு வரக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டது. 2025ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட அந்த தடையின் அடிப்படையில் இந்த வழக்கானது பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் வெளிநாடுகளிலிருந்து ஒரு பொருள் துறைமுகத்தை வந்தடைந்த பிறகு ஏதேனும் பொருளானது கைப்பற்றப்பட்டிருந்தால் Assessment அடிப்படையில் அபராதம் மட்டுமே விதிக்கப்பட வேண்டுமென்றும், பொருட்களினுடைய மதிப்பு குறைவாக இருக்கும்பட்சத்தில் வழக்கானது தொடுக்க முடியாது என்றும், மேலும் எதிரியானவர் 18 நாட்களாக சிறையில் இருந்து வருகிறார் என்றும், எனவே அவரை பிணையில் விட வேண்டுமென்று வாதிடப்பட்டது.

4] அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் எதிரிகள் தரப்பில் சொல்வது தற்போது பிணை மனுவில் விவாதிக்க முடியாது என்றும், வழக்கானது தற்போது புலன் விசாரணையில் இருந்து வருகிறது. புலன்விசாரணையில் இருந்து வரும் காரணத்தினாலும், மேலும் சில எதிரிகளை கைது செய்ய வேண்டியுள்ளது என்ற காரணத்தின் அடிப்படையிலும் இந்த பிணை மனுவானது நிலைக்கதகுந்ததல்ல என்றும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

5] இந்த மனு ஏற்கத் தகுந்ததா? எதிரியை பிணையில் விடதக்கவரா? என்று முதலில் காண வேண்டியுள்ளது. அதன்படி பார்க்கும்பொழுது இந்த மனுதாரரால் கடத்தி வரப்பட்டதாக சொல்லப்படும் Commiiphore Wightii (Guggul Resin) பிசினானது 2025ம் ஆண்டு முன்னர் வரை Customs Case Act ன் கீழ் தடை செய்யப்பட்ட ஒன்றாக காணப்படவில்லை. அது 2025ம் ஆண்டுக்கு பின்னர் தடை செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்ற எதிரிகள் வெளிநாட்டில் இருப்பதாக கூறியிருந்தாலும்,

அவர்களை கைது செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்து எந்தவொரு விசயமும் அரசு தரப்பில் சொல்லப்படவில்லை. மேலும் எதிரிகள் 19.07.2026 முதல் 18 நாட்களுக்கு மேலாக காவலில் இருந்து வருகின்றனர். அவர்களிடமிருந்து இந்த வழக்கு சம்பந்தப்பட்ட சான்று பொருட்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டுள்ளது. எனவே மேலே கண்ட காரணங்களின் அடிப்படையில் எதிரிகளை பிணையில் விடலாம் என முடிவு செய்யப்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

1] மனுதாரர்/எதிரிக்காக இரண்டு பிணையதாரர்கள் தலா ரூ.25,000/-த்திற்கு பிணை பத்திரங்கள் எழுதி கொடுக்கும்பட்சத்திலும், மேற்கண்ட தொகைக்கு இரண்டு ஜாமின்தாரர்கள் அவர்களுடைய சொத்து மதிப்பை காட்டுவதற்கு Property Tax Receipt தாக்கல் செய்யும்பட்சத்திலும் பிணையில்விட உத்தரவிடப்படுகிறது.

2] இம்மனுதாரர் மறு உத்தரவு வரும்வரை தினந்தோறும் காலை 10.00 மணிக்கு எதிர்மனுதாரர் அலுவலகத்தில் ஆஜராகி கையொப்பம் செய்ய வேண்மென்று உத்தரவிடப்படுகிறது.

3] மனுதாரர்/எதிரி இந்த வழக்கிலுள்ள சாட்சிகளை கலைக்கவோ, மிரட்டவோ கூடாது என்றும், விசாரணையின்போது ஒவ்வொரு வாய்தாவிற்கு தவறாமல் ஆஜராக வேண்டுமென்றும், அவ்வாறு தவறும்பட்சத்தில் அவரின் பிணையம் மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின்படி ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறேன்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரி பார்க்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் தேதி வியாழக் கிழமை திறந்த நீதிமன்றத்தில் வைத்துப் பகரப்பட்டது.

ஒப்பம்/எஸ். அசன் முகம்மது
கூடுதல் தலைமை நீதித்துறை நடுவர்,
மதுரை.

**நகல்** The Special Public Prosecutor, Madurai.